# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,217 — 1936 ம் ஞூ ஆனிமீ 8 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினல் திருததப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்கள் மேட்டுத் தெருவில் அபாயம் விளைவிக்கும் மூலையைத் திருத்துதலாகிய ஓர் பகிரங்க தேவைக்கு வேண்டிய தான பின்சொல்லப்படும் காணியை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி எனக்கு கற்பனைசெய்திருப்பதனல் :

பிரதமபடத்து இலக்கம் A 571. சென்ற்போல்ஸ் உவாட்டிலிருக்கும் மேட்டுத் தெரு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | பெ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மேட்டுத் தேரு (ஹில் ஸ்றீற்) வரிப் பண இலக்கம் 34 உள்ள காணி | கற்சுவரின் பகுதியுள்ள (வெறு நிலம்) தோட்டம் | கொழும்பு சென்ற் போல்ஸ் உவாட்டில் (மேட்டுத் தெரு (வரிப்பண இலக்கம் 34 ல் இருக்கும் விவேகானந்த சபை | 0 | 0 | 0·25 |

மேற்சொல்லப்பட்ட காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஆண்டு மே (வைகாசி)மீ 30 ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும் அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்று உறுதிகளாலும் பதிவுக்கொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்கக் கந்தோர்,
கொழும்பு, 1936 ம் ஞூ (மே) வைகாசிமீ 1 ந் உ.

டபிள்யு. எல். மேர்வி,
நகர்சங்க சபாநாயகரும், கொழும்பு நகராதிகாரியும்.

---

**1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம்** பிரிவின் பிரகாரம் கொலேடண்ட-பல்லல கிராமச்சங்க வீதி **எல்லை** மாற்றம் **என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்** சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 367. குறிச்சி—தெனிப்பிட்டியா (சிங்களம்).

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கிறலகும்புற அல்லது எடண்டகவகும்புற | நெல்வயல் .. | கொலேடணட வாசிகளாகிய (1) நவறுனணகே டொன் அந்திறயஸ் சில்வா, (2) வறிசஉற பைசோஹாமி, (3) ருமசுந்தர மெண்டிஸ் சில்வா, (4) எட்வேட் பெஞ்ஜமின் சேனரற்ன, (5) வலஹேவாகே பொடிசின்ஞே, (6) விஜேசேகரகமாச்சிகே சைனீறிஸ் அப்பு, (7) கலத்தும்பகே பபுன்அப்பு, (8) வறிசஉற சிசிய நோனு, (9) டெனிப்பிட்டியா வாசியாகிய அஹமது லெவ்வை மரைக்காயர் மத்திச்சினு முஹம்மது காசிம் | 0 | 0 | 7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் **எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம்** நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறிதத காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் **1936 ம் ஞூ (ஜுலை) ஆடி** மாசம் 22 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு "வெலிகாமம்" றெஸ்ற் ஹவுசில் (தங்குமிடம்) என்முன்பாக **வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணி யிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல்அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.**

**மாத்தறைக் கச்சேரி,**
**1936 ம் ஞூ வைகாசிமீ 1 ந் உ.**

**எஸ். எம். டவ்,**
மேல் **உதவி அரசாட்சி ஏசண்டு.**

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

மட்டக்களப்பு உப்புக் குதத்திலிருந்து அக்கரைப்பற்று உப்புக் குதத்துக்கு 1,500 அந்தர் உப்பு, 1936 ம் ஆண்டு ஆடி மாதம் 1 ந் திகதிக்கும், 1937 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ந் திகதிக்கும் இடையில் கொண்டு போய் ஒப்புக்கொடுப்பதற்கு கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும். உப்புக்குதம் கொள்ளக்கூடிய அளவுக்கடக்கமாக அந்தந்த நேரங்களிலும் அக்குதம் கொள்ளக்கூடிய தொகையுமாக உப்பு கொண்டு போய் ஒப்புக்கொடுக்க வேண்டியது.

2. குறித்த குதத்திற்கு ஒரு அந்தா நிறுத்து அடுக்குஞ் செலவு சேர்ந்து என்னவீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக்கடதாசியில் காட்டப்படவேண்டும்.

3. கேள்விக்கடதாசியின் உறை இடப்பக்க மூலையில் " உப்பு ஏற்றக் கேள்விக்கடதாசி " என்று எழுதப்படல் வேண்டும். கேள்விக்கடதாசிகள் கிழக்கு மாகாண மட்டக்களப்பு ஏசன்று கந்தோரில் 1936 ம் ஆண்டு ஆனி மாதம் 2 ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்படல் வேண்டும்.

4. கேள்விக் கடதாசிகள் போமில் எழுதியிருக்க வேண்டும். போம் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. கேள்விப்போம் பெறுவதற்கு ரூபா 20 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத் துண்டு காண்பிக்கவேண்டும். கிழக்கு மாகாண ஏசன்றரால் அல்லது சரியான தத்துவம்பெற்றவரின் பதிலாளால் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தி லறிவித்தல பெற்ற ஏழு நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதிமுடிக்க அல்லது ஏற்றுகொள்ளக்கூடிய பிணை கொடுக்கத்தவறினல் கட்டிய பணம் ரூபா 20 அரசாட்சியாரால பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத்தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளிற் தவறு செய்தவராய்க் கவனிக்கப்பட்டு அரசாட்சி ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மானமில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக் கூடியவராயிருப்பார். ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்டதன்மேல் கட்டிய ரூபா 20 திரும்பக் கொடுக்கப்படும்.

6. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்குப் பிணைக்காரராய் வருவோமென்று சம்மதம் சொல்லித் தங்கள மேல்விலாசங்கள் கொடுக்கும் இரண்டு தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக்கடதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் கட்டவேண்டிய காசுப்பிணை எவ்வளவென்பதை கேள்விக்கடதாசிகள் எடுத்த பின்னர் தீர்மானிக்கப்படும்.

8. கிழக்கு மாகாண ஏசன்றருக்குக் கேள்வி அனுப்பும்போதே அக் கேள்வியின் கொப்பி ஒன்று கேள்விக்காரனுல் தபால் மூலமாய் அரசினரின் நிரச சாஸ்திர நிபுணரும் உப்பு அமைத்திருக்கும் (Government Mineralogist and Salt Adviser, Colombo) அனுப்பப்படல் வேண்டும்.

9. நியமிக்கப்பட்ட கழிவுக்குமேல் ஏதாவது குறையிருக்குமானுல் ஒரு அந்தருக்கு ரூபாய் மூன்று சதம் 36 (முப்பத்தாறு) வீதம் கொந்திருத்துக்காரன் கட்டவேண்டும்.

10. வேறு தேவையான விளம்பரங்கள் மட்டக்களப்பு கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

11. அரசாட்சியார் ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட எதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒன்றித்தும் தனித்தும் வேறு ஆட்களுடனுவது கொடுக்கப்படமாட்டாது. அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் அழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் எதொருவரையும் அல்லது கீழ்மாகாண ஏசென்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களி நிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

12. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விக ளொன்றும் கவனிக்கப்படமாட்டாது. கேள்விகளிலொன்றை அல்லது எல்லாவற்றையுங் கையேராமல் தள்ளிவிட அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

அ. விஸ்வநாதன்,
கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றுக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1936 ம் ஆண்டு வைகாசிமீ 4 ந் உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவிற் சுட்டிய 1 ம் செடூலின் B பிரிவின்படி அறிவித்தல்,

மட்டக்களப்பு தாமரைக்கேணி பொன்னையா கந்தையா ஆகிய நான் என்னை மட்டக்களப்பு டிஸ்திறிக்கில், தமிழ்ப்பாஷையில், கடமைசெலுத்தும் பிரசித்த நொத்தாரிஸ் ஆக நியமிக்கும்படி வருகிற ஜூலை மாதம் 11 ந் திகதிக்குப்பின் பதிவுகாரிய தலைவருக்கு விண்ணப்பிக்க எண்ணியிருக்கிறேன் என்பதை இதனுலறியத்தருகின்றேன்.

தாமரைக்கேணி, மட்டக்களப்பு. பொ. கந்தையா,
1936 ம் ஞு சித்திரைமீ 8 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.